வடக்கு.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 01/2023

எனது இல:**NP/07/10/02/206**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
*2023.01.16.*

தலைவர்,
வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழுள்ள பதவிகளில் உள்ள அலுவலர்களுக்கான 1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2022 (2023)**

வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கோரிக்கைக்கமைய, வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின், கீழ்க்குறிப்பிடப்படும் பதவியில் உள்ள அலுவலர்களுக்கான 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள், அப்பதவிகளுக்கான நடைமுறையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திட்டங்களுக்கமைய, செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அவர்களால் **2023 ஆம் ஆண்டு** நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**2.0 தகைமைகள் :**

வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பின்வரும் பதவிகளில் உள்ள அலுவலர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறுவர்.

| தொ.இல | பதவி | தரம் |
|---|---|---|
| 1. | உதவிப் பொது முகாமையாளர் (நிதி நிர்வாகம் மற்றும் நிதி) | II |
| 2. | போக்குவரத்து உத்தியோகத்தர் | II |
| 3. | முகாமைத்துவ உதவியாளர் | III |
| 4. | பேருந்து நிலையப் பொறுப்பதிகாரி | III |
| 5. | திடீர் பரிசோதனை உத்தியோகத்தர் | III |

**3.0 விண்ணப்ப படிவம்**

3.1 பரீட்சார்த்திகள், இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து தமது நிறுவனத்தலைவர் ஊடாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ / கைமூலமான தபால் முறையிலோ அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

3.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **" NP/07/10/02/206 "** எனும் அடையாளக் குறியீட்டு இலக்கம் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டிய இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்திராத விண்ணப்பங்களும் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும்.

3.3 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டிய இறுதித் திகதி *2023.01.31* ஆகும்.

4.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:-** பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச்சீட்டு (Passport)
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் (Driving License)

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரினதும் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

5.0 **பரீட்சைக் கட்டணம்:-**

5.1 முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

5.2 ஏனைய பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா **250** ஐயும், ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களுக்குத் தோற்றுவதாயின் ரூபா **500** ஐயும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகமொன்றிலும் செலுத்தி காசுக்கட்டளையினை **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு செலுத்துதல் வேண்டும்.

5.3 விண்ணப்பதாரி காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

6.0 **அனுமதி அட்டை :**
விண்ணப்பங்கள் முறைப்படியாக சமர்ப்பிக்கும் அலுவலர்களுக்கு, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். எவ்வாறாயினும், பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதுடன், தகுந்த காரணங்களின் அடிப்படையில், பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைளில் மாற்றம் ஏற்படலாம் என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். மேலும், பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர் அதுபற்றி பின்வரும் விபரங்களுடன் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு கிடைக்கக்கூடிய வகையில் அறிவித்தல் வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,
- பணம் செலுத்தியிருப்பின் காசுக்கட்டளையின் உறுதிப்படுத்திய பிரதி,
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கம் (Fax No),

7.0 இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு நிறுவனத் தலைவர்களால் தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XIIன் பிரிவு 19ற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

8.0 உத்தியோத்தர்கள் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

9.0 பரீட்சைக்கு தோற்றியுள்ள சகல பரீட்சார்த்திகளுக்குரிய பெறுபேறுகளும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

*10.0* பாடத்திட்டம் :-

இணைப்பு *01* இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

*11.0* மேலும், வடக்கு மாகாண உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் Exam & Recruitments ⟶ Advertisement எனும் தொடர்பின் ஊடாகவும் குறித்த சுற்றறிக்கையினைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதுடன், இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள்பற்றி தங்கள் அதிகார சபையின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**கவனிக்கவும் :- இவ்விடயத்தில் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப்பிரிவின் 021 - 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். எவ்வாறாயினும், இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.**

**சி.திருவாகரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

பிரதி : - செயலாளர், நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம் - தகவலுக்காக

*இணைப்பு – 1*

*1. உதவிப் பொது முகாமையாளர் (நிதி நிர்வாகம் மற்றும் நிதி)*
***Assistant General Manager ( Finance Administration & Finance)***

| பாட இல | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|---|
| 01. | **General Administration and State Policy**<br>Sub No :- 01<br>Time :- 03 Hour<br>Total Marks :- 100 | This paper will be designed to test the knowledge of the employee concerned in good office practice and systems, current circular instructions and provisions of the Establishment Code and his / her knowledge of the current state policy relating to the function conferred upon the institute. |
| | மொழிபெயர்ப்பு | |
| | பொது நிர்வாகம் மற்றும் அரச கொள்கை<br>பாட இல : 01<br>நேரம் : 03 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | சிறந்த அலுவலக செயற்பாடுகளும் முறைமைகளும் தொடர்பான அலுவலரின் அறிவு, நடப்பிலுள்ள சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்கள், தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக, நடைமுறையிலுள்ள அரச கொள்கை பற்றிய அறிவினைப் பரிசோதித்தல் தொடர்பாக இவ்வினாப்பத்திரம் வடிவமைக்கப்படும். |
| 02. | **Public Finance Management**<br>Sub No :- 02<br>Time :- 03 Hour<br>Total Marks :- 100 | This paper is designed to test the knowledge of the employee on Public Finance Management with special reference to the public corporations. |
| | மொழிபெயர்ப்பு | |
| | பொது நிதி முகாமைத்துவம்<br>பாட இல : 02<br>நேரம் : 03 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | பொது நிதி முகாமைத்துவம் பற்றிய ஊழியரின் அறிவுடன், அரச கூட்டுத்தாபனங்கள் விசேடமாகத் தொடர்புபட்டுள்ள ஊழியரின் அறிவினைப் பரிசோதித்தல். |
| 03. | **General Management**<br>Sub No :- 03<br>Time :- 03 Hour<br>Total Marks :- 100 | This paper will be designed to test the employee's power of constructive thinking and problems solving ability. The employee will be presented with one or more situations posing problems to which solutions are required, and question on Management Principals. |
| | மொழிபெயர்ப்பு | |
| | பொது முகாமைத்துவம்<br>பாட இல : 03<br>நேரம் : 03 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | ஊழியரின் ஆக்கபூர்வமான சிந்தனை, மற்றும் பிரச்சனைகளைத் தீர்க்கும் திறன் என்பவற்றைப் பரிசோதிக்கும் வகையில் இந்த வினாப்பத்திரம் வடிவமைக்கப்படும். ஒன்று / ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் முன்வைத்தல் வேண்டப்படுவதுடன், ஊழியர் விளக்கமளித்தல் எதிர்பார்க்கப்படும். |

2. போக்குவரத்து உத்தியோகத்தர் - *Transport Officer*

| பாட இல | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|---|
| 04. | **Office Systems**<br>Sub No :- 04<br>Time :- 03 Hour<br>Total Marks :- 100 | This is to test whether the candidate has acquired an appropriate degree of knowledge of the office systems practiced in a Government Office and the candidate's ability to apply such knowledge, under real conditions meaningfully and fruitfully |
| | மொழிபெயர்ப்பு | |
| | **அலுவலக முறைமை**<br>பாட இல : 04<br>நேரம் : 03 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | விண்ணப்பதாரி, அரச அலுவலகத்தினுள் உள்ள முறைமை பற்றிய சரியான அறிவைப் பெற்றுள்ளாரா என்பதை சோதனை செய்வதற்கானதும், அதற்கான தனது அனுபவத்தை அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்துவதற்கான இயலுமையைக் கொண்டுள்ளமை தொடர்பான அறிவைப் பரிசோதிப்பதற்குமாக அமையும். |
| 05. | **Accounting Systems**<br>Sub No :- 05<br>Time :- 03 Hour<br>Total Marks :- 100 | This paper will be designed to gauge the knowledge and understanding of the candidate on the basic books of accounts and financial management maintained in a public office and the ability of the employee to apply the knowledge purposefully. |
| | மொழிபெயர்ப்பு | |
| | **கணக்கீட்டு முறைமை**<br>பாட இல : 05<br>நேரம் : 03 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | அரச அலுவலகங்களில் உள்ள அடிப்படைக் கணக்கீட்டு நூல்கள் மற்றும் நிதி முகாமைத்துவத்தைப் பராமரித்தல் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவு மற்றும் புரிந்துகொள்ளல் ஆகியவற்றுக்கான அறிவினைப் பரிசோதித்தலும், தமக்கான அறிவினை நோக்கத்துடன் பிரயோகிக்கும் இயலுமையை ஊழியர் கொண்டிருத்தலும் தொடர்பாக அமையும். |
| 06. | **Subject knowledge relevant to the post**<br>Sub No :- 06<br>Time :- 02 Hour<br>Total Marks :- 100 | This test is to assess the subject knowledge of the candidate relevant to the post. |
| | மொழிபெயர்ப்பு | |
| | **பதவிக்குப் பொருத்தமான விடய அறிவு**<br>பாட இல : 06<br>நேரம் : 02 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | தமது பதவிக்கான விடய அறிவை விண்ணப்பதாரி கொண்டுள்ளமையை மதிப்பீடு செய்வதாக இப்பரீட்சை அமையும். |

*3. முகாமைத்துவ உதவியாளர் - Management Assistant*
*பேருந்து நிலையப் பொறுப்பதிகாரி – OIC – Bus Stand*
*திடீர் பரிசோதனை உத்தியோகத்தர் - Flying Squad Office*

| பாட இல | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|---|
| 07. | **Office Systems**<br><br>Sub No :- 07<br>Time :- 02 Hour<br>Total Marks :- 100 | A basic knowledge of the office systems practiced in the organization and the candidate's ability to apply such knowledge, as well as his ability to properly understand official documents and to present his / her views / observation in a specific mannar through clear and brief minute, and the ability to draft a letter in terms of a given order will be tested. |
| | மொழிபெயர்ப்பு | |
| | **அலுவலக முறைமை**<br>பாட இல : 07<br>நேரம் : 02 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | அலுவலக முறைமை தொடர்பாக நடைமுறையில் உள்ள அடிப்படை அறிவு மற்றும் அதனை பிரயோகிக்க இயலுமான அறிவை விண்ணப்பதாரி கொண்டுள்ளாரா என்பதையும், அலுவலக ஆவணங்களை முறையாக விளங்கிக்கொண்டு தெளிவான குறிப்பு ஒன்றினூடாக தமது அவதானிப்புக்களை முன்வைத்து, வழங்கப்படும் கட்டளையின் அடிப்படையில் ஒரு கடிதத்திற்கான வரைபை தயாரிக்கும் திறனை விண்ணப்பதாரி கொண்டுள்ளாரா என்பதையும் பரீட்சிப்பதாக அமையும். |
| 08. | **Accounting Systems**<br>Sub No :- 08<br>Time :- 02 Hour<br>Total Marks :- 100 | This paper will be designed to gauge the knowledge and understanding of the candidate on the basic books of accounts and financial management maintained in a public office. |
| | மொழிபெயர்ப்பு | |
| | **கணக்கீட்டு முறைமை**<br>பாட இல : 08<br>நேரம் : 02 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | அரச அலுவலகங்களில் உள்ள அடிப்படைக் கணக்கீட்டு நூல்கள் மற்றும் நிதி முகாமைத்துவத்தைப் பராமரித்தல் தொடர்பாக விண்ணப்பதாரின் அறிவு மற்றும் புரிந்துகொள்ளல் ஆகியவற்றுக்கான அறிவினைப் பரீட்சிப்பதாக அமையும். |
| 09. | **Subject knowledge in the relevant post**<br><br>Sub No :- 09<br>Time :- 02 Hour<br>Total Marks :- 100 | This paper is to test the knowledge of the candidate on matters relating to the subjects assigned to him / her. |
| | மொழிபெயர்ப்பு | |
| | **பதவிக்குப் பொருத்தமான விடய அறிவு**<br>பாட இல : 09<br>நேரம் : 02 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளிகள் - 100 | இப் பரீட்சையானது, விண்ணப்பதாரி தமக்கு கையளிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடையதான அறிவைக் கொண்டுள்ளமையை பரீட்சிப்பதாக அமையும். |